
# கட்டு

92

மாதஇதழ்
அக்.' 88
80 காசு





FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஈழத்தில் இந்தித் திணிப்பு

"பிரபாகரனைப் பிடிக்க முடியாத ஆத்திரத்தில் இந்தியப்படைகள் செய்து வரும் அட்டூழியங்கள், இலங்கை ராணுவத்தின் கொடுமைகளை விடப் பல மடங்கு மிஞ்சி விட்டன" இப்படிக் கூறுகிறார் ஈழத்தின் வவுனியா மாவட்ட மக்கள் குழுத்தலைவர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம்.

இந்திய ராணுவத்தினர், இந்தியாவின் தேசிய மொழியான இந்தியை ஈழத்து மக்கள் மேலும் திணிக்கத் துவங்கி விட்டனர். ராணுவத்தினரால் பிடிபட்டு, பின்பு விடுவிக்குப்போது அவர்களுக்கு அடையாளச் சீட்டு வழங்கினால், மீண்டும் அவர்கள் ராணுவப் பிடியில் சிக்கி சித்திரவதை அனுபவிக்காமல் தப்பலாமே என்று உயர் ராணுவ உயர் அதிகாரிகளுடன் ஈழத்து மக்கள் தலைவர்கள் பேச்சு வார்த்தை நடத்தும்போது வேண்டினர்.


रिहाई - प्रमाण पत्र

VAVUNIYA

இந்தியில் அடையாள சீட்டு.

இதற்கு இணங்கி இப்போது இந்திய உயர் அதிகாரிகள் இராணுவச் சீட்டு வழங்கியுள்ளனர். ஆனால் அந்த அடையாளச்சீட்டு முழுவதும், மக்களுக்குத் தொடர்பே இல்லாத இந்தி மொழியில் அமைந்துள்ளது. யார் மேல் யார் மொழியைத் திணிப்பது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டதா? ஈழத்துத் தமிழர்கள் என்ன தென்னிந்தியத் தமிழர்களா?

"சிங்களத்தையே ஏற்க மறுத்த நாம் இந்தித் திணிப்பை எப்படி ஏற்போம்?" என்று ஆவேசமாகக் கேட்கிறார் மக்கள் குழுத் தலைவர்.


— மனயன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கிரிக்கெட்டும், ஒலிம்பிக்கும்

குட்டி தேசங்களெல்லாம் ஒலிம்பிக் வீர விளையாட்டுகளில் தங்கமும் வெள்ளியும் தட்டிச் செல்லும் காட்சியை டீவியில் பார்க்கும் போது, இந்தியாவை நினைத்து நெஞ்சு பதைக்கவில்லையா?

இந்த இழிநிலைக்கு முக்கிய காரணம் இந்தியாவை பிடித்திருக்கும் யானைக்கால் வியாதிதான். அதாவது தேவையற்ற வளர்ச்சி பெற்ற கிரிக்கெட் என்ற யானைக் கால் வியாதி தான், பிற ஆட்டங்களுக்கு இங்கு எமனாக நிற்கிறது. உலகம் ஒரு விழையாட்டகவே கணக்கில் எடுத்துக் கொள்ளாத ஒரு ஆட்டத்திற்கு இந்தியா கோடிக் கணக்கில் பணமும், நேரமும், செலவிட்டு நாட்டையே ஆண்டின் முக்கால்வாசி நாட்கள் கிரிக்கெட் மோகத்தில் மூழ்கடித்து வருகிறது. யானைக்கால் கிரிக்கெட், வளர்ச்சியில்லா வீக்கம் என்று நமக்குப் புரியவில்லை.




நமக்குத் தெரிந்த ஒரே விளையாட்டு கிரிக்கெட்! 20 ஆண்டுகட்கு முன் கால்பந்து, ஹாக்கி, கபடி, வாலிபால் போன்ற வீர விளையாட்டுகளை எங்கும் காணமுடிந்தது. இன்றுக் கிராமங்களுக்குச் சென்றால் கூட கோவணம் கட்டிய சிறுவர்கள் சுவரில் மூன்று கரிப்பட்டைகளைப் போட்டு மட்டையடிக்கும் காட்சியையே காண முடிகிறது. டீவி, ரேடியோ அனைத்திற்கும் செல்லப்பிள்ளை கிரிக்கெட் தான். கிரிக்கெட் இரைச்சலில் பிற இனிய ஆட்டங்கள் கேட்பாரற்றுப் போய்க் கொண்டிருக்கின்றன. கிரிக்கெட்டிற்கு அரசு செலவிடும் பெருந் தொகையில் பல தங்கப்பதக்க ஆட்டக்காரர்களை உருவாக்க முடியும்.

இந்தியாவிற்கு உலக அளவில் பெருமை ஹாக்கியாலோ, பிற வீரவிளையாடல்களாலோ வரமுடியுமே தவிர நிச்சயம் கிரிக்கெட்டால் வர முடியாது. இந்திய இளைஞர்கள் பிற விளையாட்டுகளை ஆடவே தெரியாதவர்களாகி வருகிறார்கள். இந்நிலையில் அடிமட்டத்திலிருந்து ஹாக்கி போன்ற விளையாட்டுக்களுக்கு ஆர்வம் வளர்ந்தாலொழிய தேர்ந்த விளையாட்டு வீரர்களை நாம் பெறவே முடியாது.

ஒலிம்பிக்கில் படிப்படியாக இந்திய ஹாக்கி செல்வாக்கு இழந்து வரும் நிலையை மாற்ற வேண்டுமெனில், கிரிக்கெட்டுக்குச் சில காலம் தடை விதித்தாலும் தவறில்லை.

– எழில்

FREE E- BOOKS , www.thamizham.net ,,

# தேசிய முன்னணி நம்பிக்கைக்குரியதா?

எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையால், வி.பி. சிங்கிற்கு அலகாபாத் வெற்றி கிடைத்தது; அலகாபாத் வெற்றியினால் 'தேசிய முன்னணி' கிடைத்துள்ளது!

ராஜீவ் காந்தி அரசை ஆட்டங்காண வைத்திருக்கும் பலமான எதிர்க்கட்சி இது என்பதில் சந்தேகமில்லை; ஆனால் சரியான எதிர்க்கட்சியா என்பதில் சந்தேகமுள்ளது.

செப்டம்பர் 17 இல் 71 அம்சத் திட்டங்களுடன் எழுந்திருக்கிறது தேசிய முன்னணி! சோசலிச சமுதாயத்தை அமைப்பது, நேருவின் ஆட்சி மொழிபற்றிய உறுதி மொழியை நிறைவேற்றுவது, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுலாக்குவது, இலங்கையில் போர் நிறுத்தம் செய்வது, பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, மதவெறிச் சக்திகளை முறியடிப்பது முதலானவைகள் குறிப்பிடத்தக்க சில அம்சங்கள்!



கேட்பதற்கு நன்றாய்த்தான் உள்ளது-நம்பமுடியவில்லை என்பதைத் தவிர!

சோசலிச சமுதாயத்தை, நேரு காலத்தில் ஆவடி மாநாட்டில் தொடங்கி, எல்லா பிரதமர்களும் அமைத்து விட்டனர். மீதமுள்ள சோசலிசத்தைக் கொண்டு வருவதாக இப்போது வி.பி. சிங் கூறுகிறார்.

மொழிபற்றிய நேருவின் உறுதிமொழியே முதலில் குளறுபடியானது! அதை நிறைவேற்றுவோம் என்று காலகாலமாகத் தி.மு.க. கூறிவருவதை, இனி தேசிய முன்னணியும் சேர்ந்து சொல்லும்.

அரியானாவில் லோக்தளமும், பாரதிய ஜனதாவும் கூட்டாட்சி நடத்துகின்றன. அங்கே பி.ஜே.பி. யோடு கூட்டு வைத்துக்கொண்டு இங்கே மட்டும் எப்படி தேவிலால் மதவெறியை முறியடிப்பார்?

இப்படிப் பல நியாயமான கேள்விகள், தேசிய முன்னணியின் சந்தர்ப்பவாதக் கூட்டை நமக்குத் தெளிவுப்படுத்துகின்றன. ஆனாலும் ஊழல் மலிந்த ராஜீவின் ஒடுக்கு முறை அரசுக்கு எதிராக மக்கள் கூட்டம் ஒன்று திரள இம் முன்னணி ஒரு தளமாகப் பயன்படக்கூடும்!

—பொதுஜனன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,




1934 ஆம் ஆண்டு பீகாரில் பெரும் நில அதிர்ச்சி ஏற்பட்டு கடுமையான உயிர்ச்சேதத்தையும் பொருள் சேதத்தையும் உண்டாக்கியது. அது பற்றிக் காந்தியடிகள் விடுத்த அறிக்கையில் :

" **தீண்டாமை என்னும் பாவத்திற்காக இறைவன் கொடுத்த தண்டனை** " என்று குறிப்பிட்டார்

தாகூர், 'அறிவியலுக்குப் பொருந்தாத கருத்து இது,' என்றார். நேருவோ 'இந்த பூமி அதிர்ச்சியினால் இங்குள்ள தர்பங்கா மகாராஜாவின் சொத்துக்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது அப்படியானால் ஜமீன்தாரி முறையைக் கடவுள் பெரும்பாவமாக கருதுகிறார், என்று ஒப்புக் கொள்ளலாமா? அல்லது -

காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டதற்காகக் கிடைத்த தண்டனை என்று கூறலாமா? தீண்டாமைதான் இப்பூகம்பத்திற்குக்காரணமென்றால் அது பெரிய அளவில் பரவியுள்ள தென்னிந்தியாவுக்கல்லவா வந்திருக்க வேண்டும்' என்று சாடினார்.

**கம்பராயன், கோவை-41. (ஆதாரம் . வெ. சாமிநாத சர்மா ; "காந்தியும், ஜவகரும்")**

FREE E - BOOKS , www.thamizham.net.,

தமிழ்த் திரைப்படங்கள்

# கனவுக் காட்சிகள்

டி. ராஜேந்தரின் படங்களில் கனவுக் காட்சிகளையும், 'செட்' டுகளையும் பார்த்து விட்டுத்தான் வெளிநாட்டினர் அவரை ஹாலிவுட்டிற்கு அழைத்தனர் என்று சினிமா வட்டாரத்தில் செய்தி அடிபடுகிறது. இருக்கலாம்! ஜெமினி எஸ். எஸ். வாசனிடம் 'சந்திரலேகா' படத்தில் 'செட்' போட்ட கலைஞர்கள், இப்போது டி.ஆரிடம் பணியாற்றுகின்றனர். பிரம்மாண்டமான முறையில் மட்டுமல்லாது, கண்ணை உறுத்தாத வகையில் வண்ணங்கள் அமைய வேண்டும் என்பதிலும் டி.ஆர். ரொம்பவும் கவனம் செலுத்துகிறாராம். ஸ்ரீதர் படங்களில் பாடல்கள்; கே. எஸ். ஜி. படங்களில் வசனம்; பாலு மகேந்திரா படங்களில் ஒளிப்பதிவு ; கே. விஸ்வநாத் படங்களில் இசை; என்பது போல டி ஆர். படங்களில் கனவுக் காட்சிகள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன.

ஆனால், இவையெல்லாம் தொழில் நுட்பம் பற்றிய விஷயம். அதைக்காட்டிலும், இத்தகைய கனவுக் காட்சிகளால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்பு என்ன என்பதே நமக்கு மிகவும் முக்கியம்.

கனவு – ஒரு போதை! கனவில் மிதப்பதற்கும், கஞ்சாவில் மிதப்பதற்கும் அப்படியொன்றும் வித்தியாசமில்லை. காதலிக்குக் கடிதம் எழுதக்கூடக் காசில்லாத இளைஞன், காதலர் இருவர் கனவு மாளிகையில் ஓடியாடுவதைக் காண்பதன் மூலம், மேலும் மேலும் மழுங்கடிக்கப்படுகிறான். படத்தைப் போலவே தானும் கனவு கண்டு கனவில் வெற்றி பெற்று, வாழ்வில் தோற்றுப் போகிறான்.

கனவுக்காட்சிகள், வாழ்க்கைத் துன்பத்தை மறப்பதற்கு உதவுகின்றன என்று கூறுவோர் உண்டு. துன்பத்தை மறப்பதன் மூலம், துன்பத்திலிருந்து விடுபட முடியுமா? பிரச்சனைகளை எதிர்கொள்ளும் துணிவில்லாமல், பிரச்சனைகளை விட்டு ஓடுவது, வெறும் தப்பித்தல் வாதம் (Escapism) தானே?

நம் தமிழ்த் திரைப்படங்களில் கனவுக் காட்சிகளுக்கு ஆகும் செலவில், மே.வங்க, கேரள இயக்குநர்கள் ஒரு படமே எடுத்து விடுகின்றனர். அவர்கள் நிஜ பூமியில் காலூன்றி நிற்கிறார்கள்; நாமோ கனவு வானத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம்.

(அடுத்த இதழில்; நடனக் காட்சிகள்)

— வசந்தா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பிச்சைக்காரர்கள் பற்றிப் பல்கலைக் கழக ஆய்வு

உலகிலேயே பிச்சைக்காரர்களை மிகுதியாகக் கொண்டுள்ள பெருமை இந்தியாவையே சேரும். அயல்நாட்டினர் தங்கள் கருத்துப் படங்களில் இந்தியாவைப் பிச்சைக்காரர் வடிவில் குறிப்பிடுகின்றனர்.

இந்த இழிநிலையைப் பற்றிய ஒரு சமூகவியல் ஆய்வை புதுவைப் பல்கலைக்கழகத்தின் தமிழியல் துறை மேற்கொண்டுள்ளது புதுவையைச் சுற்றியுள்ள 85 பிச்சைக்காரர்களைச் (ஆண்கள் : 47, பெண்கள்: 38) சந்தித்துக் கிடைத்த புள்ளி விவரங்களும், பெறப்பட்ட முடிவுகளும் வருமாறு :



1) மிகுதியாகப் பிச்சை எடுப்போர் ஆதிதிராவிடர்களே (28·23%) அவர்களுக்கு அடுத்த நிலையில் முதலியாரும் (12·94), கவுண்டரும் (12·94) உள்ளனர்.

2) 95.29% இந்துக்கள்; 4·70% கிறித்துவர்கள்.

3) 77.64% படிக்காதவர்களும், 22·36% படித்தவர்களும் உள்ளனர். படித்தவர்கள் கூட 8ஆம் வகுப்பும், குறைவாகவும் படித்தவர்களே.

4) பிச்சை எடுக்கத் தரப்படும் காரணங்களில் முதலிடம் வகிப்பது. உடல் ஊனம்; இரண்டாவது நோய். ஊனமுற்றோரையும், நோயாளிகளையும் தமிழ்ச்சமூகத்தினர் எப்படி நடத்துகின்றனர் என்பதை இது காட்டுகிறது.

5) திருமணமானவர்களே பிச்சை எடுப்பவர்களில் பெரும்பாலானோர் (80%).

6) விதவையானோர் பிச்சைக்காரர்களில் மிகுந்துள்ளனர் (22·35%) தமிழ்ச் சமூக அமைப்பில் விதவைகள் நிலை எவ்வளவு பரிதாபமாக உள்ளது என்பதை இது காட்டுகிறது.

7) வேலை கிடைத்தாலும் வேலை செய்ய உடன்படாதோர் தொகை 83·52%. பிச்சைக்காரர் விடுதிகளில் சிறு தொழில்கள் அறிமுகப்படுத்தப்பட்டும் அவை தோல்வியடைந்ததன் காரணம் இதனுடன் இணைத்துப்பார்க்கத்தக்கது.

8) உடல் நலிவுற்றால் 91·70% பேர்கள் மருத்துவமனைக்குச் சென்று ஆங்கில மருந்துகளையே நாடுகின்றனர். நோயால் வரும் துன்பத்தை மருத்துவமே நாடாமல் 7·05% பேர்கள் முற்றிலும் சகித்துக் கொள்வது, தலைவலிக்குக்கூட மருத்துவமனைக்குச் செல்லும் பலருடைய பார்வைக்கு உரியது.

9) பணம் சேமிப்போர் 9·41%; சொந்த வீடு உள்ளோர் : 16·47%, 3 வேளையும் உண்போர் ; 21·17%

10) பிச்சைக்காரர்களின் பொழுது போக்காக சினிமா முதலிடம் வகிப்பது கவலைக்கும், கவனத்திற்கும் உரியது.

தகவலுக்கு நன்றி : புதுவைப்பல்கலைக்கழகத் தமிழியல் துறை

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது எளிய மருத்துவம் - 3

நடுவண் அரசின் ஆயுர் வேத சித்த மைய ஆராய்ச் சிக்கழகம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வமான குறிப்புகள் இவை.

### வாந்தி

**அறிகுறிகள் :** அடிக்கடி செரியாமல் வாந்தியாதல், தாகம்.

**மருந்து :** 1. ஏலம் 2 கிராம், சீரகம் 4 கிராம் இரண்டையும் சேர்த்து இடித்துப் பொடித்து 200 மி.லிட்டர் நீர் விட்டு கால்பாகமாகச் சுண்டக் காய்ச்சி பின் வடிகட்டவும்; தினம் இரு வேளை 50 மி, லிட்டர் வீதம் அருந்தவும்.

2. உப்பிட்ட எலுமிச்சம் ஊறுகாய் அல்லது எலுமிச்சம் பழத்தைத் தேனில் உரைத்துக் கொடுத்தாலும் வாந்தி நிற்கும்.

### தீப்புண்

**அறிகுறிகள் :** தீச்சுட்ட புண் அல்லது வெந்நீர் விழுந்து புண்ணாதல்.

**மருந்து :** 1. சுண்ணாம்புத் தெளி நீரில் தேங்காய் எண்ணெய் கலந்து வெளிப்பிரயோகமாக உபயோகிக்கவும்.

2. குங்கிலிய வெண்ணெய்யை வெளிப்பிரயோகமாகப் புண்பட்ட இடத்தில் தடவவும்.

### தொண்டைச்சதை (டான்சிலைடிஸ்)

**அறிகுறிகள் :** அண்ணாக்குத் தூறு வீங்கிச் சிவந்து தொண்டையில் வலி, விழுங்கும் போது வலி, சில சமயம் சுரம்.

**மருந்து :** 1. கற்பூரவல்லி இலையைத் தினம் 3 வேளை மென்று தின்னவும்.

2. பூண்டைத் தோல் நீக்கி அரைத்துப் புதுத் துணியில் தடவி அனலில் வாட்டிப் பிழியச் சாறு இறங்கும். சாற்றிற்குச் சமனெடை தேன் கலந்து வைத்துக் கொள்க. இக்கலவையைக் பஞ்சில் தோய்த்து குச்சியில் சொருகி உள்ளே புண் உள்ள இடத்தில் தினம் 2 அல்லது 3 வேளை பூசவும்.

### கண்ணோய்

**அறிகுறிகள் :** கண் சிவத்தல், வலி, கண்ணீர் வடிதல், பீளை சேருதல், கண் கூச்சம், இமை ஒட்டிக் கொள்ளல்.

1. சாதத்தில் வெண்ணெய் கலந்து ஒற்றடமிடல்.

2. படிகாரம், 230 மி. கிராம், பன்னீர் 250 மி. லிட்டர் கலந்து கல்சார்க் புட்டியில் காற்று புகாமல் வைக்கவும். இந்தப் படிகப் பன்னீரை ஒரிரு துளிகள் விடவும்.

— சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,



"தமிழ் நாட்டின் தமிழ்த்தெருவில் இது என்ன ஊர்வலம்? இவர்கள் எந்த நாட்டுக்காரர்கள்?"

"நம்ம ஆட்கள் தாங்க"

"ஓகோ எதாவது ஆங்கில கான்வென்ட் பள்ளி உயர் வகுப்பு மாணவர்களா?"

"அட நீங்க ஒன்னு நம்ம தி.மு.க. இளைஞர்க திராவிடப் பரம்பரையின் தேசிய அணி வகுப்புங்க"

"தலையிலே கிரிக்கெட் தொப்பி, கழுத்திலே "டை", காலிலே "ஷுஸ்", அது மட்டுமன்றி குளிர்தேசத்துக்காரர்கள் மாதிரி கையிலே உறை இதெல்லாம் பார்த்தால், தமிழ்ப் பண்பாடாகவோ, திராவிட நாகரிகமாகவோ, இந்திய கலாச்சாரமாகவோ தெரியவில்லையே. இவர்களுக்கெல்லாம் நிச்சயம் தமிழர்கள் தானா?"

"எங்களை என்ன நினைச்சிட்டீங்க. தமிழ் எங்கள் உயிர்! உரிமைக்குத் தமிழ் உறவுக்கு ஆங்கிலம்! தமிழ் வாழ்க! இந்தி ஒழிக"

(தேசிய முன்னணி பேரணி 17-9-88 அன்று சென்னையில் நடந்தபோது மு.க. ஸ்டாலின் தலைமையில் இளைஞர் அணியினர் அணி வகுத்து,சென்ற போது காதில் விழுந்த இருவரின் உரையாடல்)

## சுட்டி முன் இதழ்கள் வேண்டுமா?

நீங்கள் படிக்காமல் விட்ட முன் இதழ்களைப் படிக்க (இதழ் எண் 72 முதல பெறலாம்) இதழுக்கு 50 காசு விதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M. O.) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# எமக்கு வந்தவை

<u>தமிழ் இதழியல் வரலாறு</u> (27.00) மா.சு. சம்பந்தன் தமிழர் பதிப்பகம், 243, லிங்க செட்டி தெரு, சென்னை - 600 001 பக்:354

<u>ஒரு நாள் விடியும்:</u> (8.00) சிறுகதைத் தொகுப்பு - நா, நாகராஜன் கனிமுத்துப் பதிப்பகம், 727, அண்ணா சாலை, சென்னை - 600 006. பக்:94

<u>பாசிச எதிர்ப்பு இயக்கம்</u> (1.00) கொள்கையும் - அமைப்பும் - கேடயம், 11, வட அகரம் 2- வது தெரு, மேத்தா நகர், சென்னை - 600 029 பக்:21

<u>நெருப்பு வளையத்தில் :</u> (7.50) கடிதங்கள், கவிதைகள் - செங்கண்மா முருகு, ஸ்டார் பப்ளிகேஷன்ஸ், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005 பக் :62

<u>முகவரிச் சாலைகள்</u> (5.00) கவிதைகள் - மேதாவாணன், மலர்கள் வெளியீடு, 15, 4வது பெருஞ்சாலை, சென்னை - 600 061, பக் :56

<u>மார்க்சியத்தின் புரட்சிகரமான கருத்துக்கள் வெறும் வரலாறு அல்ல</u> : (விலை இல்லை) கிரிகோரி வதலஜோவ் பக்:84

<u>எல்லாக் குழந்தைகளும் நம் குழந்தைகளே</u> (விலை இல்லை) நதெஸ்தா அஸ்கினா சோவியத் அநாதைக் குழந்தைகளின் பிரச்சனை தீர்க்கப்பட்ட விளக்கம் - பக் 52

மேற்கண்ட இரு நூல்களும்: சோவியத் நாடு பிரசுரங்கள்

115, தியாகராய ரோடு, சென்னை - 600 017

<u>வாரமுரசு</u> (0.50) வார இதழ் - ஆசிரியர்: ராஜா சொர்ணசேகர் ஆண்டுச் சந்தா : ரூ 24. 00 2-சி நடராஜா காலனி, சிவகாசி -626 123

<u>துளி</u> : (1.00) பல்சுவைமாத இதழ் - ஆசிரியர் கவிஞர் சேலம் ப. பாலன் பி-23, சீரங்கர் வீதி, ஈரோடு-1

<u>ஆன்மீக இன்பம்</u> : (1.50) சர்வ சமய ஆன்மீக மாத இதழ். ஆசிரியர். முஹ்யித்தீன் ஷாகுல் அமீத், ஆண்டுச்சந்தா: ரூ 20.00 முஹ்யித்தீன் நிலையம், கும்முடிபூண்டி 601 201

<u>தேவி ஓசை:</u> (1.50) அரசியல் கலை இலக்கிய மாத இதழ். ஆசிரியர் , சொ. அடைக்கலம், 216-1 பேப்பர் மில்ஸ் ரோடு, சென்னை - 600 011

<u>Magic Wand</u> (ஆண்டுச் சந்தா: 30.00) ஆங்கில மாத இதழ் - ஆசிரியை: திருமதி கிரேஸ்துரை, 474, என்.ஜி.ஜி.ஓ காலனி, கோயம்புத்தூர் - 641 022

FREE E - BOOKS , www.thamizham.net.,

# காக்கும் 'கை' கரி பூசுகிறது!



அண்மையில் மத்தியப் பிரதேசத்தைச் சார்ந்த பேராசிரியர் ஒருவரை, இளைஞர் காங்கிரஸ் (இ) கட்சியைச் சேர்ந்த சிலர், பல்கலைக்கழகத்திற்குள் புகுந்து அடித்ததோடு, அவர் முகத்தில் கரி பூசி அவமானப்படுத்தியும் உள்ளனர். கடந்த ஆகஸ்ட் மாதம் 8ஆம் தேதி, இந்த 'நாகரிகமான' செயல் நடந்துள்ளது.

சாகர் பல்கலைக்கழகத்தின் இதழியல் (Journalism) துறைத் தலைவரான பேராசியர் பிரதீப் கிருஷ்ணா, இதழில் துறை நுழைவுத் தேர்வு வினாத்தாளில், "ராஜீவ் காந்தி ஒரு திருடன்" என்னும் வாக்கியத்தை ஒலிப்பரப்பிய அனைத்திந்திய வானொலி நிலையம் எது என்று ஒரு வினாவைக் குறித்திருந்தார். 27.5.88 ஆம் தேதி, பாட்னா வானொலி நிலையத்தின் நேரடி (live) ஒலிபரப்பு ஒன்றில், ஒரு சிறுமி "கலி கலி மெய்ன் ஷோர் ஹை! ராஜீவ் காந்தி சோர் ஹை!" என்று எதிர்பாரா வகையில் கூறிவிடவே, எல்லோரும் திடுக்கிட்டுப் போய்விட்டனர். இந்த விநோதமான நிகழ்ச்சியைத்தான், பேராசிரியர் வினாத்தாளில் கேட்டிருந்தார்!

பல்கலைக்கழகத் துணைவேந்தர், குறிப்பிட்ட பேராசிரியரிடம் தக்க விளக்கம் கேட்டு 'மெமோ' அனுப்ப, பிரதீப் தன் பதிலில், "இதழியல் துறைக்கு வருகின்றவர்கள், எதிர்பாராமல் நடந்துவிட்ட வித்தியாசமான நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் தான் கேள்வி கேட்கப்பட்டுள்ளது" என்று விளக்கம் கூறியுள்ளார்.

பேராசிரியர் செய்தது சரிதானா என்பது விவாதத்திற்கு உரியது. ஆனால், அதற்காக அவரை அடித்தும்,முகத்தில் கரிபூசியும் அவமானப்படுத்தியதைக் கண்டித்து பல்கலைக்கழகத்தின் அனைத்து ஆசிரியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதன் பிறகு, குற்றவாளின் கைது செய்யப்பட்டு ஜாமீன்னில் வெளிவந்துள்ளனர்.

ராஜீவ் காந்தி காங்கிரஸின் ஜனநாயகம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது!

—பழநி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஐயப்ப ஜோதி உண்மையா?

ஐயப்பன் சீசன் ஆரம்பமாகப் போகிறது! திருவிதா
வருமானம் கூடிக் கொண்டே போகிறது. சென்ற ஆ
இப்படி எல்லோரையும தன்பக்கம் கவர்ந்திழு
விசேஷம் இருக்கிறது? எதற்காகக் கோடிக்கணக்கில்
ஒவ்வொரு வருடமும் ஜனவரி 14ஆம் தேதி கா
கோடிக்கணக்கில் பக்தர்கள் கூட்டம். தேவஸ்தான
தெய்வீக ஒளி, தானாய்த் தோன்றி மறையும் அதிசயம்
அப்படித்தான் நம்பியது. ஆனால் துணிச்சல் மிக்க இ
உலகுக்குச் சொன்னார்கள்!

சபரிமலையிலிருந்து 10 கி. மீ. தூரத்தில் உள்ள
லிருந்து அந்த 'ஜோதி' தெரிகிறது - இல்லை - காட்டப்
அமைப்பைச் சார்ந்த T. N. பாபு, சுகுமாரன் என்னும்
காலை ஆறு மணிக்கு, அம் மலையின் உச்சிக்குச் செ
கள் நின்று கொண்டிருந்தன. ஒன்று தேவஸ்தானத்
ஜீப்! இன்னொன்று, காவல்துறையினரின் (KLF 2672)

இளைஞர்களின் சந்தேகம் வலுப்பெறத் தொடங்
வைகளைக் கவனித்தார்கள்.

சிறிது நேரத்தில், மின்சார வாரியத்துக்குச் சொந்தமா
கற்பூரம், தேங்காய், கோணிப்பை முதலான பொருட்
அலுமினியப் பாத்திரத்தில் பாதியளவு கிளிமண் நிரப்பப்
மெழுகு போடப்பட்டது. அந்தக்குழு மெல்ல நகர்ந்
தகர்ந்தது. அங்கே ஒரு நட்சத்திரம் போல ஒரு பெரிய
ஒரு முனையில் அம்புக்குறி! அந்த திசையில்தான்
படம் மேலே)

சுற்றி நின்ற போலீஸ் காவலுடன், அந்த இடத்
மணிக்கு, மெழுகுவர்த்தியில் நெருப்பைப் பற்ற வை
நாக்கை நீட்டியது. ஒரு ஆள் அந்த அலுமினியப் பா
முறை கைகளால் உயர்த்தி இறக்கினார். சபரிமலையி
பிளந்தது. பிறகு பாத்திரத்தைக் கீழே வைத்து கோணி

ரகசியமாய்க் கீழே இறங்கி வந்த இளைஞர்கள்
ளாவில் ஒரே பரபரப்பு! எல்லாம் பொய் என்று மறு
1983ஆம் ஆண்டு, நிறையப் பேரோடு, ஜனவரி 14 கா
தையே யுக்தி வாடி சங்கம் நடத்தியது!

பாதையைப் போலீஸார் மறித்தனர். மீறியவர்கள்
துவமனையில் சேர்க்கப்பட்டனர். கம்யூனிஸ்ட் கட்சி
பிரச்சனையை எழுப்பினார். அரசும் உடனே ஒரு
கதி என்னாயிற்று என்பது இதுவரை தெரியாத மர்மம்.

போலீஸின் ஆசிர்வாதங்களோடு இன்னமும் 'மகர
முடிந்தால் நீங்களும் போங்கள் - நாடு உருப்படும்!

FREE E - BOOKS , www.thamizham.net.,



..ர் தேவஸ்தானத்திற்கு ஒவ்வொரு வருடமும்
..ன் வருமானம் மட்டும் ஏழு கோடி ரூபாய்.
..தும் ஐயப்பன் கோயிலில் அப்படியென்ன
..தர்கள் அங்கே கூடுகின்றனர்?
..ல் தெரியும் "மகர" ஜோதியைத் தரிசிக்கவே
..ன் தலைவர் பாஸ்கரன் நாயர், 'அது ஒரு
..ன்கிறார். 1980 ஆம் ஆண்டு வரை உலகமும்
..டு இளைஞர்கள் உண்மை என்ன என்பதை

..பொன்னம்பலமேடு என்னும் மலை உச்சியி
..டுகிறது. 'கேரள யுக்தி வாடி சங்கம்' என்னும்
..இரு இளைஞர்களும், 14-1 1980 ஆம் தேதி
..றனர். அங்கே ஏற்கனவே இரண்டு 'ஜீப்'பு
..தச் சேர்ந்த KRT 2591 என்ற எண் கொண்ட
..ப்!
..யது. ஒளிந்து நின்று, மேற்கொண்டு நடப்ப

.. வேறொரு ஜீப் வந்தது. அந்த ஜீப்பிலிருந்து
..ளோடு ஆட்கள் இறங்கினார்கள். ஒரு பெரிய
..ட்டது. பிறகு அதன்மேல் ஏறத்தாழ 5 கிலோ
.. பொன்னம்பலமேட்டின் உச்சியை நோக்கி
..றி போடப்பட்டிருந்தது. அந்நட்சத்திரத்தின்
..ரிமலை உள்ளது. (அவர்கள் எடுத்த புகைப்

.. சில பூஜைகள் முடிந்தவுடன், சரியாக 6-35
.., நீலநிற ஜோதி 5 அடி உயரத்திற்குத் தன்
..திரத்தைத் தன் தலைக்கு மேலே தூக்கி மூன்று
.." சாமியே சரணம் ஐயப்பா" சத்தம் வானைப்
..யைகளால் ஜோதி அணைக்கப்பட்டது.
..சங்கத்தின் மூலம் செய்தியை வெளியிட, கேர
..த்தது தேவஸ்தானம்! உண்மையை நிரூபிக்க,
..யில் பொன்னம்பல மேட்டிற்கு ஒரு ஊர்வலத்

.. மீது தடியடிப் பிரயோகம் நடந்தது. சிலர் மருத்
..யச் சார்ந்த K. V. சுரேந்திரநாத், சட்டசபையில்
..சாரணைக் கமிஷன் நிறுவியது. ஆனால் அதன்

..ஜோதி" தெரிகிறது! மக்களும் நம்புகிறார்கள்!

... கறுப்புச்சட்டை

(ஆதாரம்: இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி 15-2-87)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தமிழில் தந்தி

மோர்ஸ் தந்தியைக் கண்டுபிடித்து 150 ஆண்டுகளாகி விட்டன. இம்முறை இந்தியாவுக்கு வந்து ஒரு நூற்றாண்டுக்கு மேலாகி விட்டது. முற்றிலும் ஆங்கிலத்திலேயே அனுப்பப்பட்டு வந்த தந்திச் செய்திகள் கால் நூற்றாண்டாக இந்தியிலும் அனுப்பப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் தரப்படும் மிகப்பெரும்பலான தந்திகள் தமிழகத்திற்குள்ளேயே அனுப்பப்படுகின்றன. பெரும்பாலான மக்கள் தமிழ் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியவர்கள் என்பதால் தமிழில் தந்தியனுப்பும் இன்றியமையாமையை உணர்ந்து 1955 இல் அஞ்சல் துறை ஊழியர் புலவர். அ. சிவலிங்கம் "தமிழில் தந்தி" யை மிகவும் அரும்பாடுபட்டு கண்டுபிடித்தார்.

ஆங்கில முறையில் அமைந்துள்ள தெளிவு, வேகம் முதலியன இத்தமிழ்த்தந்தியிலும் அமைந்து கற்கவும், இயக்கவும் எளிதாக இருப்பதாக மோர்ஸ் முறை அறிந்தவர்கள் கருதுகின்றனர். 26 ஒலிக் குறிகளில் மோர்ஸ் முறை அமைந்துள்ளது. தமிழில் உள்ள 247 எழுத்துக்களுக்கும் 6 வடமொழி எழுத்துக் களுக்கும் 33 ஒலிக்குறிளே இம்முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கால் நூற்றாண்டாக செயல்பட்டு வரும் இந்தித் தந்தியை காட்டிலும் விரைவாகவும் பிழையின்றியும் இது இயங்க முடியும். இவரின் தமிழ்த்தந்தி முறையைப் பயில மிக்க உழைப்பும், கூர்ந்த மதியும் கூடத்தேவையில்லை. சிறுவர்கள் கூட கற்கலாம். சிவலிங்கம் அவர்கள் எழுதியுள்ள "தமிழில் தந்தி" என்ற நூலின் துணை கொண்டு 15 நாட்களுக்குள் இதனைக் கற்க முடியும்.

இத்தமிழ் தந்தி கண்டுபிடிக்கப்பட்டவுடன் இதழ்கள், தமிழறிஞர்கள், அஞ்சல் அதிகாரிகள், மத்திய செய்தித்துறை அமைச்சர் உட்பட பலரும் பாராட்டினார்கள். சில நகரசபைகளும், சங்கங்களும் இதனை உடனே செயல்படுத்த கோரிக்கை விடுத்தன.

ஆனால் 33 ஆண்டுகளாகியும் தமிழில் தந்தி முறை நடைமுறைக்கு வரவேயில்லை. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று வாய்ப்பந்தல் போட்டவர்களும், மத்திய அரசுக்கு வேண்டியவர்களாக ஆட்சியிலிருந்தவர்களும் வாய்ப்பிருந்தும், ஆக்கப்பூர்வமாக இந்த நற்செயலை செய்யவேயில்லை.

இன்று திரு. சிவலிங்கம் அவர்களின் பெயரே இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. சுட்டி இதழ் 58 இல் தமிழில் தந்தி முறையைக் கண்டுபிடித்ததாக திரு. அருணாசலம் என்பார் பெயரை குறிப்பிட்டதும், அண்மையில் தொலைகாட்சியில் தமிழ்த்தந்தி பற்றி தமக்கும் தம் பேரனுக்கு மட்டுமே தெரியும் என திரு. அருணாசலம் கூறியிருப்பதும் தவறான தகவல்கள் என திரு.சிவலிங்கம் வருந்தி எழுதியுள்ளார்.

உண்மை காலங்கடந்தேனும் வெல்லும் என்ற நம்பிக்கையோடு இவர் காத்திருக்கிறார்.

(முகவரி: புலவர். அ. சிவலிங்கம், 10 ஆர்.எம்.எஸ் காலனி, கருமண்டபம், திருச்சி - 620001)

-ஸ்டெனிஸ்லாஸ்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

பன்முக மனிதர்கள்

# நா. காமராசன்



அரசியல், இலக்கியம் எந்தத் துறையானாலும் சரி, பரபரப்பாக பெருமைக்குரிய விதத்தில் அறிமுகமாவதும், பிறகு அதே வேகத்தில் பெருமைகளை இழந்துவிடுவதும், கவிஞர் நா. காமராசனின் 'தொட்டில் பழக்கம்'

23 ஆண்டுகளுக்கு முன், மாணவர்களின் இந்தி எதிர்ப்புப் போர் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த நேரத்தில், இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்தியதன் மூலம் அரசியல் வானில் அறிமுகமான இருவரில் ஒருவர்தான் காமராசன். ஒரு போராளியாய் அறிமுகமான இவர், அதற்குப் பிறகு அரசியலில், கருணாநிதிக்கும், எம். ஜி. ஆருக்கும், இப்போது ஜெயலலிதாவுக்கும் துதிபாடுவதை மட்டுமே தன் தொழிலாகக் கொண்டுவிட்டார். கடைசியாய், தி. நகரில் அரங்கநாயகத்துக்கு நடந்த பாராட்டு விழாவில் அவர் உதிர்த்த பொன்மொழி "நம் ஜனநாயக தேசத்தின் முடிசூடா ராணி ஜெயலலிதா" (ஜனநாயகத்தில் ராணி, ராஜா, சேவகன் எல்லோரும் உண்டு போலிருக்கிறது!)

இலக்கியத் துறையிலும் இவர் அறிமுகம் பரபரப்பாகவே இருந்தது. 1971 ஆம் ஆண்டு வெளியான இவரது "கறுப்பு மலர்கள்" கவிதை தொகுப்பு, புதுக்கவிதை உலகில் ஒரு திருப்பத்தை உருவாக்கியதை யாரும் மறுக்கமுடியாது! ஆனால் அதற்குப் பிறகு வெளிவந்த எந்த நூலும் இவர் பெயரைக் காப்பாற்றவில்லை. இளையராஜாவின் வீட்டுக் கதவுகளை இசையோடு தட்டுவதே அவரின் இன்றைய இலக்கியப் பணியாய் ஆகிவிட்டது.

"பகுத்தறிவு, சோசலிசம் என்கிற அடிப்படை இலட்சியங்கள் எனக்குண்டு. அவற்றைக் கலாபோதையோடு நான் பாடுவேன்" என்று தன் நூலுக்கு முன்னுரை எழுதிய இவர், கொஞ்ச காலத்திற்கு, ஆர்.எஸ்.எஸ். பணிகளுக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

இவருடைய "மாணவத்தீ" அணைந்து, இலக்கியத் தாகம் அடங்கி, பகுத்தறிவுச் சாயம் வெளுத்து... இன்னும் என்ன பாக்கி?

—கோபக்காரன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

சிறுகதை :

# நாய்கள்

நான் ரூமிற்குள் நுழையும்போது ஸ்கூல் கரஸ்பாண்டண்ட் துரைசாமியும், ஹெட்மாஸ்டர் மணியும் விவாதித்துக் கொண்டிருந்தார்கள் : இந்த வருடம் சுதந்திர தின விழாவிற்குத் தலைமை தாங்க யாரைக் கூப்பிடுவது, கொடியேற்ற யாரைக் கேட்டுக் கொள்வது என்று.

என்னைப் பார்த்தவுடன் கரஸ்பாண்டண்ட் துரைசாமிக்குச் சற்று ஆறுதலாய் இருந்தது. அவர் நினைப்பதை அப்படியே செயல்படுத்துவதில் நான் சற்று சமர்த்தன்.

"கொடியேற்ற [illegible] அமைச்சரைக் கூப்பிடலாமா" என்றார் ஹெட்மாஸ்டர்; ஏகமானதாக, திருப்தியுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அடுத்த [illegible] சொற்பொழிவாற்ற யாரைக் கூப்பிடலாம்!

"பள்ளிக் கல்வி இயக்குனரைக் கூப்பிடலாமா ?" இப்போதும் ஹெட்மாஸ்டர்தான் கேட்டார். துரைசாமி முகம் அதை ஆமோதிக்கவில்லை, புரிந்து கொண்டேன். "அவரு வேண்டாம் சார். ரொம்ப நேரம் பேசி [illegible] போரடிப்பாரு சார், மாணவர்களுக்கும் [illegible] எப்படா முடியும்னு ஆயிடும்" என்றேன். [illegible] பெயர் தள்ளப்பட்டது. அடுத்து ஒரு பிரபலமான [illegible] பெயரைச் சொல்லி அவரை அழைக்கலாமா என்று கேட்டார். இதையும் கரஸ்பாண்டண்ட் முகம் ஆதரிக்கவில்லை. இடையில் நான் புகுந்தேன். "அவரு ரொம்ப காரசாரமா பேசுவாரு சார். புரட்சிகரமா பேசறேன்னு சொல்லிப் பேசி அப்புறம் பெரிய ப்ராப்ளம் ஆயிடும் சார்" என்றேன்; அந்தப் பெயரும் தள்ளப்பட்டது.

எனக்குள் பொறி தட்டியது. ஒரு [illegible]மான 'இன்ஞ்சினியரிங்' கல்லூரி ஒன்றின் பெயரைச் சொல்லி அதன் முதல்வரை அழைக்கலாம் என்றேன். கரஸ்பாண்டண்ட் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பிரகாசித்தது. "கரெக்ட் அவரையே "இன்வைட்" பண்ணித் தலைமை தாங்கச் சொல்லலாம். புள்ளைங்களுக்கும் அவரு பேசறது பிடிக்கும்" என்றார், கரஸ்.

கல்வி அமைச்சரைக் கூப்பிட்டாயிற்று. அடுத்து இன்ஜினிரிங் கல்லூரி பிரின்ஸ்பால்தான். எனக்குத் தெரியும், கரஸ்பாண்டண்ட் பையன் அடுத்த ஆண்டு பொறியியல் கல்லூரிக்கு விண்ணப்பிக்கப் போகிறன்.

— முத்தையா

FREE E - BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிழிவு



## பிணந்தின்னிகள்

(வெளியீடு: சென்னைபுக்ஸ், 6, தாயர் சாகிப் இரண்டாம் சந்து, சென்னை-2 ஜூன் 1988 (மூன்றாம் பதிப்பு) 22+90 பக் - விலை ரூ 8/-)

காலவெள்ளத்தில் மறைந்து போகும் காயங்கள் உண்டு; மறக்க வேண்டிய காயங்களும் உண்டு; ஆனால் மறக்க முடியாத, மறக்கக் கூடாத காயம் அந்த "அவசர காலம்" என்னும் எச்சரிக் கையோடு இந்நூல் தொடங்குகிறது.

1975 ஜூன் 26 இல் அவசரநிலைப் பிரகடனத்திற்குப் பிறகு நேர்ந்த பல அவலங்களை நாடறியும். கேரளத்துப் பொறியில் கல்லூரி மாணவர் ராஜனுக்கு நேர்ந்த கொடுமைகளை எல்லா விவரங்களோடும் இந்நூலின் ஆசிரியர் சி.ஆர். விவரிக்க, பி.ஆர். பரமேஸ்வரன் தமிழில் பெயர்த்துள்ளார்.

கோழிக்கோடு பொறியியல் கல்லூரியின் விடுதியில் "பசித்த ஓநாய்கள் பச்சை மாமிசத்தைக் கண்டது போல", 1-3-76 அன்று ராஜனைப் போலீஸார் கைது செய்தது முதல் 1977 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில், தன் மகனின் சடலத்தை என்ன செய்தார்கள் என்பது கூடத் தெரியாமல் ராஜனின் தந்தை பேராசிரியர் ஈச்சரவாரியார் கண்ணீர் விட்டுக் கதறியது வரை எல்லா விவரங்களும் சிறு சிறு பகுதிகளாக 74 அத்தியாயங்களில் தரப்பெற்றுள்ளன.

'77 ஆம் ஆண்டு மத்தியில் விடுதலையாகி வெளியே வந்த, ராஜனின் நண்பன் சாலிதான், கைதுசெய்யப்பட்ட மறுநாளே ராஜன் கொல்லப்பட்டு விட்டு செய்தியை உலகுக்குத் தெரிவித்தான். அதுவும் எப்படி? அணுஅணுவாய் சித்திரவதை செய்யப்பட்டு, இறுதியில் இரும்பு ரோலர்களை ராஜனின் மேல் வைத்து உருட்டி உருட்டிச் செய்து முடித்த கோரக் கொலை!

"ஹேபியஸ் கார்பஸ்" வழக்குத் தொடர்வதற்கும் அன்றைய அவசரச் சட்டம் ஈச்சரவாரியரை அனுமதிக்கவில்லை!

அடிமை இந்தியாவில் கூட விடுதலைப் போராட்ட வீரர்கள் யாருக்கும் நிகழாத கொடுமைகளைச் சுதந்திர இந்தியா ஒரு மாணவனுக்கு வழங்கியுள்ளது.

-மது

ஆசிரியர் : கு. நாராயணபாரதி, வெளியிடுபவர் : இ. இராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம் எஸ். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137. டாக்டர் நடேசன் ரோடு, சென்னை — 600 005. முகவரி 1494, அண்ணாநகர், சென்னை—600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

தென் கிழக்கு ஆசியா

# இந்தோனேசியா



சீனா, இந்தியா, சோவியத், அமெரிக்கா ஆகிய நாடுகளை அடுத்து, மிகுந்த மக்கட் தொகை கொண்ட 5வது நாடு இந்தோனேசியா. இதன் 20 லட்சம் கிலோ மீட்டர் பரப்பில் சுமார் 18 கோடி பேர் வாழ்கின்றனர். ஜாவா, சுமத்ரா, கலிமன்தான் (போர்னியோவின் ஒரு பகுதி), சுலவேசி, கிரியன் ஜெயா (மேற்கு நியூ கினியா) ஆகிய உலகிலேயே பெரிய தீவுக் கூட்டங்களால் ஆனது இந்நாடு. இத்தீவுக்கூட்டங்களில் 13,667 தீவுகள் இருப்பினும் 6000 தீவுகளில் தான் மக்கள் வாழும் நிலை உள்ளது. 7,600 தீவுகளுக்குப் பெயர் கூட இல்லை.

• மதச்சார்பற்ற நாடாயினும், உலகிலேயே இசுலாமியர்கள் மிகுந்துள்ள நாடு இதுதான். 90% மக்கள் இசுலாமியர். 2% மக்கள் பூர்வீக இந்துக்கள். இந்தியாவைச் சவால் விடும் சுமார் 360 இனங்களும், 250 கிளை மொழிகளும் உண்டு. பெரும்பாலான மக்கள் மலேசிய இனத்தவர். என்பதால் மலாய் மொழியே இந்தோனேசியாவின் தேசிய மொழியாக்கப்பட்டுள்ளது. இன்றைய தேசிய முழக்கமே "வேற்றுமையில் ஒற்றுமை" என்பது தான். செய்தித் தொடர்பு துணைக்கோள் வானில் ஏவப்பட்டு 5000 கி.மீ. நீளம் பரவியுள்ளநாடு முழுவதும் தொலைக்காட்சியைப் பார்க்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

• இயற்கை இங்கு ஈயத்தையும், ரப்பரையும் ஏராளமான காடுகளையும், விதவிதமான பழங்களையும் வாரி வழங்கினாலும், தன் சீற்றத்தையும் காட்டி வந்துள்ளது. 100 எரிமலைகளுக்கு மேல் இங்குண்டு. 1883 இல் பொங்கிய எரிமலை ஜாவாவுக்கும் சுமத்திராவுக்கும் இடையே 36,000 பேரை அழித்தது. இதன் இரைச்சல் 5000 கி.மீ. தூரத்திற்கு கேட்டதாம். பத்தாண்டுகட்கு முன்பு ஏற்பட்ட நில அதிர்ச்சியால் 6302 பேர் விழுங்கப் பட்டனர் 4158 பேருக்குப் படுகாயம்.

• கிழக்கு ஜாவாவில் 5 லட்சம் ஆண்டுகட்கு முந்தைய மனிதத் தடயங்கள் கிடைத்துள்ளன. கி.பி. 1 ஆம் நூற்றாண்டிலேயே இந்தியாவின் வணிகர்களும், துறவிகளும் இங்கு நுழைந்து இந்து, புத்த மதங்களை மட்டுமின்றி இந்திய கலாச்சாரத்தையும் பரப்பினர். சைவ பிராமணர்கள் இங்கு கிறிஸ்துவ மிஷனரிகளைப் போல, சிவவழிபாட்டைப் பரப்புவதில் முனைந்து பாடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. 14 ஆம் நூற்றாண்டில் இங்கு இசுலாமை அறிமுகப் படுத்தியவர்கள் தென்னிந்திய இசுலாமியர்களே. குஜராத்திய முஸ்லீம் வணிகர்களும் இதில் பங்கு கொண்டதாகத் தெரிகிறது.

• 1509 இல் போர்ச்சுகீசியர்கள் இங்கு வந்தனர்-பின் ஸ்பானியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் நுழைந்து கடைசியாக டச்சு கிழக்கிந்திய கம்பெனி தன் முழு ஆதிக்கத்தை இங்கு நிலைநாட்டியது. 2 ஆம் உலகப் போரில் ஜப்பான் இந்தோனேசியாவிலிருந்து டச்சுக் காரர்களை விரட்டி, நாட்டை தன் வசமாக்கியது. ஜப்பான் உலகப்போரில் தோற்றவுடன் 7-8-45 இல் மக்களே சுதந்திரப்பிரகடனம் செய்தனர். ஆனால் டச்சுக்காரர்கள் மீண்டும் தங்கள் அதிகாரத்தை தக்க வைக்க முயன்றனர். இதனை எதிர்த்து நடத்திய, விடுதலைப்போருக்குப்பின் 27-12-49 இல் இந்நாடு முழு சுதந்திரம் பெற்றது.

• அதிபர் சுகர்னோ இந்நாட்டில் தேசிய இயக்கத்தைத் தலைமை

FREE E - BOOKS , www.thamizham.net.,

தாங்கி, பின் அதிபரானார். ஆனால் அவரது பொருளாதாரத்திட்டங்கள் தோல்வியடைந்தன. கம்யூனிஸ்டுகளுக்கு அவர் அளித்த ஆதரவை மூலாதாரமாகக் கொண்டு இடது சாரியினர் திடீர் புரட்சி செய்து 6 உயர் இராணுவ அதிகாரிகளைத் தீர்த்துக் கட்டினர். இதன் தொடர்ச்சியாக நடந்த கிளர்ச்சிகளில், இராணுவம் அடக்கு முறையை ஏவியது. 5 லட்சம் கம்யூனிஸ்டுகளும், ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர். இந்தக் குழப்பங்களைச் சாதகமாக்கி 1967 இல் சுகர்டோ ஆட்சியைக் கைப்பற்றினர்.

• • சுகர்டோ, நாட்டின் 600% பணவீக்கத்தைக் குறைக்கவும், வேலையில்லாத் திண்டாட்டம், உணவுப்பிரச்சனை இவற்றைத் தீர்க்கவும் முயல்வதாக காட்டிக் கொண்டார். ஆனால் இன்றும் 47% மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தான் வாழ்கின்றனர். 70 லட்சம் மக்கள் வசிக்கும் தலைநகர் ஜகார்தா தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய நகரம். ஆனால் 15 லட்சம் மக்களுக்கே இங்கு வீடு உண்டு - பிறர் பாழடைந்த சேரிகளிலும் ரயிலடிகளிலும் வாழ்கின்றனர். இந்தோனேசிய நிலப்பரப்பில் 7% அளவே உள்ள ஜாவாவில் தான் 60% மக்கள் குவிந்துள்ளனர். குடும்பக்கட்டுப்பாடு நாடெங்கும் தீவிரமாக்கப்பட்டு வருகிறது.

• 1975 இல் எல்லையை விரிவுபடுத்த சுகர்டோ போர்ச்சுகீசிய கிழக்கு டைமர் பகுதியை இந்தோனேசியாவுடன் இணைத்தார். இதனால் கிழக்கு டைமர் மக்களின் விடுதலைப் போர் வெடித்து கொரில்லா போராக நீடித்து வருகிறது. இதில் 1 லட்சம் பேருக்கு மேல் இதுவரை மாண்டுள்ளனர்.

- உலகப்பன்

# குட்டிக் சுட்டிக் கவிதைகள்




உயரமாய்ப் பறந்தன
முதலில் கொடிகள்
அப்புறம் கொள்கை.

❁ ❁ ❁

தீபாவளி கொண்டாடுகிறார்கள்
எல்லா
நரகாசுரர்களும்.



❁ ❁ ❁

தனியார் துறையிலும்
மின்சார உற்பத்தி
அவள் விரல் நுனி !

❁ ❁ ❁

இருக்கும் போது பாராட்டாதே.
செத்துத் தொலையட்டும் –
சிலையெடுக்கலாம்.

— மது

FREE E - BOOKS , www.thamizham.net.,


## இவர்கள் இப்படியும் அறிக்கை விடலாம்




FREE E - BOOKS , www.thamizham.net.,

## வயிற்றுக்கு

# வெளியே குடல்



அறுவை மருத்துவம், சாவை விரட்டி வருகிறது. 3 மாதத்திலே இறந்துவிட இருந்த இந்த மனிதரை, புதிய முறை அறுவை சிகிச்சை காப்பாற்றி, புது வாழ்வு கொடுத்துள்ளது.

மலேசியாவின் பத்து பகாட்டைச் சேர்ந்தவர் யூசோ ஒஸ்மான். கடும் மலச்சிக்கல் காரணமாக இவர் ஒரு மாதம் அல்லது இரு மாதங்களுக்கு ஒரு முறையே மலம் கழிப்பார், அதுவும் குறைந்த அளவே வெளியாகும். தீராத வேதனை, ஒரு நாள் இரவு திருமண விருந்திலிருந்து வீடு, திரும்பிய பிறகு கடும் வயிற்று வலி மருத்துவ மனைக்கு கொண்டு சென்ற போது வயிற்றுப் பகுதி முற்றாக சேத மடைந்திருப்பதையும், குடல் பாகங்கள் வயிற்றில் தொடர்ந்து இருக்க முடியாதென்பதையும் மருத்துவர்கள் கண்டறிந்தனர்.

மாற்று வழி? குடல் பாகங்களை எடுத்து, வயிற்றுக்கு வெளியிலே வைத்து தைத்து விட்டனர். ஒஸ்மானின் உயிர் பிழைத்தது. வயிற்று வேதனை தீர்ந்தது. ஆனால் ஒஸ்மான் தனது குடலை வயிற்றுக்கு வெளியே சுமந்து வாழ்கிறார். தினமும் வயிற்றுக்கு வெளியே உள்ள குடல் வழியாக மலம் சீராக வெளியாகி விடுகிறது. சுத்தம் செய்வதற்கு ஏதுவாக பிளாஸ்டிக் பைகளால் குடல் பாகத்தை மூடி வைத்திருக்கிறார். தினம் 15 பிளாஸ்டிக் பைகள் தேவைப்படுவதால் மாதம் பைகள் வாங்கவே சுமார் ரூ 130 செலவாகிறதாம்.

இப்போது அறுவை சிகிச்சை முடித்து 10 ஆண்டுகள் ஆகியுள்ளன. 60 வயதாகியுள்ளது. எல்லோரையும் போல மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழும் இவர் 9 குழந்தைகளுக்கு (5 ஆண்கள், 4 பெண்கள்) தந்தையாகியுள்ளார்.

—மனயன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## வாசகர் எதிரொலி

குமரி அனந்தனை "பன்முக மனிதர்" என்பதைவிட திசைக்கு ஒரு நாக்கைப் பயன்படுத்தும் "பன்நாக்கு மனிதர்" என்றே சொல்லலாம்.

பொன். ராஜேந்திரன், முருங்கப்பேட்டை

பலர் முன்னிலையில் எந்த ஆணும் எந்தப் பெண்ணையும் எதுவும் செய்துவிட முடியாது. வேலைக்குப் போகும்போது மட்டும் ஆண்களுக்கு இணையாக எல்லாம் செய்ய வேண்டும். மற்ற சமயங்களில் ஆண் வாடை ஆகாது என்றால் என்ன அர்த்தம்? தமிழகத்தில் பேருந்துகளிலும், திரையரங்குகளிலும் பெண்களுக்கு அளவுக்கு மீறி முக்கியத்துவம் கொடுப்பதால்தான் ஆண்களுக்கு இந்த நிலைமை. தமிழர்களுக்கு மன ஆரோக்கியம் வருமா?

எஸ். வி. ராஜசேகர், சென்னை - 600 005.

"கடவுளின் பெயரால்"என்ற கட்டுரையைப் படித்தாவது பக்த கோடிகள் திருந்துவார்களா?

வீர. அருள்நாதன், பொதக்குடி.

பேராசிரியர் திருசுப. வீரபாண்டியன் அவர்கள் எழுதிய "சிவப்பு விளக்கின் சிறுவர்கள்" எனும் உருக்கமான மனித நேயக் கட்டுரை நம்முடைய ஜனநாயகமும், அரசியல் சட்டங்களும் மட்டுமல்ல, இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் கூட எண்ணி ஆழ்ந்து வெட்கப்பட வேண்டிய ஒரு கருத்தை உள்ளடக்கி என் நெஞ்சில் ஒருமுள்ளாக உறுத்த வைத்து வாட்டுவதாய் அமைந்து விட்டது.

ஜி. தனியன், திருப்பத்தூர்.

"தனிமனித வழிபாடு" எனும் தலைப்பில் இடம் பெற்ற கட்டுரை எனக்கு ஊக்கத்தை அளித்தது. அதை நான் பல பிரதிகளாகக் கையில் எழுதி ரசிக வெறியர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னேன். இங்கு அனைவரும் பிரபு ரசிகர்கள். எனவே பிரபுவையும் அக்கட்டுரையில் சேர்த்து எழுதினேன். என்முயற்சி ஓரளவு பலன் அளித்தது. சில நண்பர்கள் தங்கள் தவறை உணர்ந்து என்னிடம் மனம் விட்டுப் பேசி மேலும் சுட்டிக்கு நன்றி தெரிவிக்க வேண்டினர். இதுபோன்ற கட்டுரைகள் நாளை நிச்சயம் நல்லதொரு மாற்றத்தை உண்டாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு மனதில் வேரூன்றி விட்டது.

சபாலாஜி கிருஷ்ணன், தூத்துக்குடி.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# எத்தனை கறுப்புச் சட்டங்கள்

அலை அலையாய் வருகின்றன அடக்குமுறைச் சட்டங்கள்!

"அவதூறு மசோதாவை எதிர்த்துப் பத்திரிக்கையாளர்களும், பொதுமக்களும் சத்தம் போட்டுக் கொண்டிருக்கும் வேளையில், சத்தமில்லாமல் இன்னொரு மசோதா 28-4-88 அன்று ராஜ்யசபையில் நிறைவேறியுள்ளதையும் மறந்துவிடக் கூடாது. "மருத்துவமனைகள் மற்றும் இதர நிறுவனங்கள் மசோதா" (Hospitals and other inst tutions Bill) என்னும் பெயரில் வந்துள்ள அக் கறுப்புச் சட்டம் தொழிலாளர்களின் பல உரிமைகளைப் பறிப்பதாய் உள்ளது.

ஜனதா ஆட்சியில் 1978 ஆம் ஆண்டு ஒரு முறையும் இதே ஆட்சியில் 1982 ஆம் ஆண்டு (Bill No. 12/82) மறுமுறையும் அறிமுகப்படுத்தப்பட்டு, கடுமையான எதிர்ப்புக்கள் காரணமாக, திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட அதே மசோதா, இப்போது மீண்டும் தன் கோர முகத்தைக் காட்டியுள்ளது.

மருத்துவ மனைகள், கல்வி நிறுவனங்கள் ஆகியன வற்றில் பணியாற்றுவோர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைச் சட்டப்படி குற்றமாக்குவதே இச் சட்டத்தின் சாரம். இச் சட்டத்தின் 8 (a) பிரிவு,

"No employee shall go on strike or indulge in any other form of cessation or retardation of work, such as, work to rule, go slow, gherao or the like in breach of contract" என்று சொல்கிறது.

தொழில் தகராறு சட்டம் (Industrial Disputes Act, 1947) தந்துள்ள பல உரிமைகளை, இந்தச் சட்டம் பறித்துக் கொள்கிறது.

புதிய உரிமைகளைப் பெற வேண்டிய நேரத்தில், இருக்கும் உரிமைகளையும் இழந்து போவதா?

**சுட்டி**

தொடர்பு முகவரி : AP 638, 'H' பிளாக், அண்ணாநகர், சென்னை-600 040.


ஆண்டுச் சந்தா: ரு 10, ஆயுள் சந்தா: ரு. 150

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி, மாத இதழ் : பதிவு எண் : TN/MS(N) 317.

# பட பதில்கள்

**ஜியாவின் பாகிஸ்தானில் தண்டனைகள் எப்படி இருந்தன?**



**எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி மட்டும் தானா?**



http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)

## சுட்டி இலவசம்

சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,